# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2024
## The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.

### தனிநடிப்புப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும் (இணைப்பு: 9)

1. 12 வயதுக்குட்பட்டோர் விசேட பிரிவில் இப்போட்டி நடைபெறும். போட்டியாளர் தமக்குக் கொடுக்கப்படும் கருப் பொருளைத் தெளிவாக விளக்கும் வகையில் நடித்துக் காட்ட வேண்டும். இந்த நடிப்பு 3 நிமிடங்களுக்குக் குறையாமலும்,5 நிமிடங்களுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

2. **போட்டிக்கான கருப்பொருள் “உன்னை நீ அறிவாய்”** என்பதாகவோ அல்லது நீங்கள் தெரிவுசெய்யும் பொருத்தமான வேறொரு கருப்பொருளாகவோ அமையலாம். இவ்வாறு தெரிவுசெய்யப்படும் கருப் பொருளைப் போட்டியாளர் தெளிவாக விளக்கும் வகையில் நடித்துக் காட்ட வேண்டும்.

3. போட்டியாளரின் நடிப்பிலே பின்வரும் அம்சங்கள் கவனிக்கப்படும். **கருப்பொருளைத்** தெளிவாக விளக்கும் **நடிப்பாற்றல்** (30%),**பாத்திரத்தோடு ஒன்றியநடிப்பு**(50%), **மேடை உத்திகள், ஒப்பனை** (20%)என்ற விகிதாசாரத்தின் அடிப்படையிற் புள்ளிகள் கணிக்கப்படும்.

4. **கருப்பொருளைத்** தெளிவாக விளக்கும் **நடிப்பாற்றல்** (30%),
   - போட்டியாளர் எடுத்துக் கொண்ட தலைப்புச் செய்தியானது (கருத்து)சமூக விழுமியங்களுடன் இசைவுடையதாக இருத்தல் வேண்டும்.
   - உங்கள் தயாரிப்புச் சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும்.
   - நெறியாள்கையும் கவனத்திற் கொள்ளப்படும்.

5. **பாத்திரத்தோடு ஒன்றியநடிப்பு**(50%)
   - எடுத்துக் கொண்ட கதாபாத்திரத்தை அல்லது கருத்தைச் சரியாகவும், தெளிவாகவும் வெளிப்படுத்தும் முகமாக நடித்தல்.
   - மேடை நடிப்பின் அடிப்படை அம்சங்களுக்கு அமைய நடித்தல் (மேடைக் கூச்சத்தைத் தவிர்த்தல் வேண்டும்: நடித்துக் காட்டுதல்: அங்க அசைவுகளும் அவற்றின் மேல் நடிப்பவரின் கட்டுப்பாடும், தெளிவான விளக்கமான நடிப்பு சொற்பிரயோகம், இயல்பான நடிப்பு.
   - வசனங்களுக்குத் தகுந்த உணர்ச்சி:(மிகையான உணர்ச்சிகளை வெளிப்படுத்தல், முரணான சைகைகள் பயன்படுத்தல்,செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் பிடித்தல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.)
   - தொய்வில்லாத நடிப்புத் தொடர்ச்சியும் ஒழுங்கமைக்கப்பட்ட நடிப்பும்.

6. **மேடை உத்திகள், ஒப்பனை** (20%),
   - நடிப்பு உத்திகள் - உ + ம்: குறியீடுகள், பல பாத்திரங்கள் ஏற்றல், மேடைப் பயன்பாடு
   - ஒப்பனையானது கதாபாத்திரத்திற்கும், எடுத்துக் கொண்ட கருப் பொருளுக்கும் இயைபாக இருக்கவேண்டும். ஒவ்வாத, மிகையான ஒப்பனையைத் தவிர்க்க வேண்டும்.
   - ஒலி, ஒளி, மேடை அமைப்புக்குப் புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது.
   - மேடையில் அன்று கிடைக்கக்கூடிய வசதிகளைத் தவிர எந்த மேடை வசதிகளும் செய்து கொடுக்கப்பட மாட்டாது. மேடை விபரங்களைப் பற்றி அறிய விரும்பின் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.
   - மேடை அமைப்புக்கு மேலதிக நேரம் வழங்கப்பட மாட்டாது. மேடை அமைப்பு ஏனைய போட்டியாளர்களுக்கு இடையூறாக இருக்காது பார்த்துக் கொள்ளவேண்டும்.

7. போட்டிகளுக்கான பொது விதிமுறைகளை மற்றைய போட்டிகளின் விதிமுறைகளிற் பார்க்கவும்.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு,**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**